# முத்தே மூனா!

மகளே! எங்கள் மகளே!

மகளே! எங்கள் மகளே - எங்கள்

எண்ணத்தின் ஆசையெல்லாம்

இதயத்தில் பதித்து

எங்கள்

கனவு தேவதையாய்

கண்களில் மலர்ந்து

கருவில் உருவாய்

உலகின் அழகாய்

பிறப்பெடுத்த மகளே
தன்னலமற, தர்மம் செய்!

தூய உள்ளத்தால் பிறர்

துன்பங்களை போக்கு - என்ற

திருமறையின் போதனையெல்லாம்

சிறுவயதிலே தந்தவளே

கண்ணில் நீர் சொரிய!

கானுமிடமெல்லாம் தேடுகிறோம்

எங்களை விட்டு

எங்கே சென்றாய்!

எங்கள் மகளே

இறைவனின் திருவடியில் கலந்து

இயற்கையின் அழகாய் சிரித்து

நிற்பவளே!

உன் இன்ப கனவையெல்லாம்

எங்கள் கரத்தால்

கல்வித்தந்தையாய் இருந்து

கற்பிக்கும் போதும் - மருத்துவ

களப்பணி செய்யும் போதும்

உலகம் தழைத்தோங்க -

தர்மப்பணி செய்யும் போதும்

மகளே! எங்கள் மகளே!

உன்முகம்தான் தெரிகிறது

வாழ்க உன்புகழ் தாயே!

-புகழேந்தி (காவல் துறை ஆய்வாளர், பரங்கிப்பேட்டை)